# பாதுகாவலன்

PATHUKAVALAN


RECEIVED
Periodical Division
Library

### மறைக்கல்வி

மறைக்கல்விக்கான ஆணைக்குழு சென்ற மாதம் 14 ஆம் திகதி "பொது மறைக்கல்வி" எனும் கத்தோலிக்க மறையின் ஞான உபதேச நூலை பல ஆண்டுகால பணியின் இறுதியல் சமர்ப்பித்தது. திருத்தந்தை இதனை அங்கீகரித்த பின்பு அவை தலத் திருச்சபை ஆயர்களின் உதவியுடன் மொழிபெயர்க்கப்பட்டு வினியோகிக்கப் படும்.

மலர்: 118 இதழ் : 06 20–03–1992 ( மார்ச். 20— ஏப்ரல். 03 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

1993 ஆகஸ்ட் 3முதல் – 7வரை மகாநாடு நடத்த இலங்கை ஆயர் மன்றம் தீர்மானம்

# தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு

**இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் இரண்டாயிரமாவது ஆண்டு கொண்டாட்டங்களுக்கு ஆயத்தமாக எதிர்வரும் ஆண்டு ஆகஸ்டு மாதம் தேசிய மேய்ப்புப்பணி மகாநாடு NATIONAL PASTORAL CONVENTION ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளது. அதன் பொதுச் செயலாளரும் கொழும்பு துணை ஆயருமாகிய பேரருள்திரு ஒஸ்வல்ட் கோமஸ் ஆண்டகை இதனை அறிவித்துள்ளார்.**

"இன்றுதிருச்சபை வாழ்ந்து பகிர்கிறது "என்ற தலைப்பில் தேசிய மேய்ப்புப்பணி மகாநாடு ஒன்றை 1993 ஆகஸ்டில் நடத்த இலங்கை ஆயர் மன்றம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் தமது இரண்டு கூட்டங்களின் பின் மகாநாட்டுக்கான திட்டங்களை அங்கீகரித்தனர்.

இதற்காக நியமிக்கப்பட்ட குழு வெகு விரைவில் பங்கு மக்களுக்கு என வினாக்கொத்து ஒன்றை தயாரித்து அனுப்ப உள்ளது.

பங்கிலுள்ள பக்திச்சபைகள், தேசிய ஆணைக்குழுக்கள், தெரிந்தெடுக்கப்பட்ட மாதிரிக் குழுக்கள், ஆலயம் செல்லாதோர் ஆகிய நான்கு மட்டங்களில் ஆயத்த வேலைகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

## தாய்வானில் இலங்கைத் தொழிலாளரின் நிலை

தாய்வானில் சட்டவிரோதமாகக் குடியேறித் தொழில் செய்யும் ஓர் இலங்கைத் தமிழரை யூக்கன் இதழ் பேட்டி கண்டபோது பின்வரும் விபரங்கள் தெரியவந்தன. வேறு ஆறு பேருடன் இவர் ஓரிடத்தில் தங்கி தானே சமைத்து மிகச் சிக்கனமாக வாழ்கிறார். ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலையில் இரவு 8 மணியிலிருந்து காலை 8 மணி வரை வேலை செய்கிறார். இது பொலிசாரின் கண்களிலிருந்து தப்புவதற்கு துணை புரிகிறது.

இதற்குமுன் இவர் ஓர் இரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்யும்போது இரு விரல்களை இழந்துவிட்டதால் இவருக்கு வேலை செய்வது இலகுவாக இல்லை.

இலங்கையில் ஒரு கத்தோலிக்கரைத் திருமணம் செய்த இவர் ஞாயிறு பூசையில் பங்குபற்ற டாக்ஸியில் செல்ல வேண்டியிருக்கிறது. வழியோ, மொழியோ, தெரியாததால் இவர் போக்குவரத்துச் செய்யவோ அங்குள்ள சீன மக்களோடு தொடர்புகொள்ளவோ இயலாதிருக்கின்றது.

வெறித்றாஸ் வானொலி. பி.பி ஸி. ஆகியவற்றின் தமிழ், சிங்கள நிகழ்ச்சிகளே இவர்கள் வெளியுலகிலிருந்து பெறும் செய்திகள். வீட்டிலிருந்து கடிதங்கள் கிடைத்தபோதிலும் இலங்கையில் அரசியல் நிலைமை பற்றி அவர்கள் அதிகம் அறியமுடியவில்லை.

பொலிசாருக்கு மட்டுமல்லாமல் இலங்கை உளவாளிகளுக்கு தாம் அஞ்சி வாழ வேண்டியிருப்பதாக அவர் கூறினார்.

அரசாங்கத்தின் தொழில் விவகார சபையின் அங்கத்தவரான பேராசிரியர் ஹுவாங் யுவே சின் அங்குள்ள இலங்கையரின் நிலை மோசமாக இருப்பதாகக் கூறினார்.


இதுபோன்ற தொழிலாளர் சுமார் 5000 பேர் தாய்வானில் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

## திருச்சபைக்கு வீரம் தேவை

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசியச் சூழ்நிலையில் திருச்சபையின் சமூகக்கொள்கைகள் பற்றிய ஆய்வரங்கில் பங்குபற்றிய கருதினால் றொஜர் எற்சேகரே "எங்கும் சான்று பகரும் திருச்சபையாக, வேதசாட்சிகளின் திருச்சபையாக விளங்கவேண்டிய ஒரு வீரம் திருச்சபைக்குத் தேவை" என்று கூறினார்.

பிரெஞ்சுமொழியில் பேசிய கருதினால் "அநீதியை பழித்துரைத்தல் போதாது, நீதியை எடுத்துக்கூறி எம்மத்தியில் பிரசன்னமாயுள்ள இறையரசை அறிவிக்கவேண்டும்." என்று மேலும் கூறினார்.

பங்குபற்றிய 113 பேரும் 12 ஆசிய நாடுகளிலிருந்தும் 5 வேறு நாடுகளிலிருந்தும் வந்திருந்தனர்.



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த கத்தோலிக்க தூதுக்குழுவினர் சென்ற பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பௌத்த மதத் தலைவரும் மல்வத்த மகாநாயக்க தேரோவுமாகிய ரம்புக்வெல்ல சிறி விபஸ்ஸி தேரோவைச் சந்தித்தனர். தூதுக்குழுவின் தலைவரும் துறவற சபைசிரேஷ்டர் பேரவைத் தலைவருமாகிய வண பிதா அலெக்சாண்டர் தூதுக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்கிறார்.



**தொழிலாளி புகழ்வளர்த்த தலைமகனை அஞ்சலிப்போம்!**

## தவக்காலத்தில் செய்யக்கூடியது

**சிந்திக்க...**

- பிறர் புகழ வேண்டுமென்பதற்காக உதவி செய்திருக்கிறேன்.
- பிறரை விட என்னை உயர்ந்தவனாகக் கருதுகின்றேன்.
- விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்றி பிடிவாதம் கொண்டுள்ளேன்.

☐ ☐ ☐ ☐

**செயற்பட...**

- தாழ்ச்சியோடும், தூய உள்ளத்தோடும் சேவை செய்வேன்.
- வீண் புகழை நாடாது இறைவனின் புகழைத் தேடுவேன்.
- பிறரிடமிருந்து எதிர்பார்ப்பதை நான் அவர்களுக்குச் செய்வேன்.

### பாஸ்கா சிறப்புமலர்

-எழுத்தாளர்களே! பாஸ்கா சிறப்பு மலருக்கான கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு உயிர்ப்பு சம்பந்தமான உங்கள் ஆக்கங்களை 5-4-92ற்கு முன்பாக அனுப்பிவையுங்கள்

ஆ-ர்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# அரசியலில் திருச்சபை?

பிலிப்பீன் நாட்டு கத்தோலிக்க ஆயர் மன்றம் மே 11 தேர்தல் தொடர்பாக இதுவரை மூன்று சுற்றுமடல்களை வெளியிட்டுள்ளது. சென்ற ஜூலை 22 இலும் நவம்பர் 22 இலும் தயாரித்து வெளியிட்ட சுற்றுமடல்கள் தேர்தலில் மக்கள் பங்குகொள்ளும் விதம்பற்றி தெளிவாக விளக்கியுள்ளன.

முதலாவது சுற்றுமடல் துப்பாக்கி, தடியடி, தங்க (Gun, goon, gold) அரசியலுக்கு எதிராக விவேகமாக வாக்களிக்கும்படி அழைப்பு விடுத்தது. இரண்டாவது சுற்றுமடலில் வேட்பாளர்களைத் தேர்ந்து கொள்வதில் விவேகம் தேவை என்பதற்கு வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டன.

இப்போது வெளியிடப்பட்டுள்ள மூன்றாவது சுற்றுமடலில் பங்குகளில் உருவாக்கப்பட்டுள்ள பொறுப்புணர்ச்சியுள்ள வாக்களிப்பு ஆணைக்குழு போன்ற அமைப்புகளின் உதவியோடு மக்கள் சிறந்த ஒரு தலைவரைத் தெரிவுசெய்வதற்கு வாக்களிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதம் 25ஆம் திகதி அன்று பிலிப்பீன்ஸ் நாட்டில் 1986 இல் மக்கள் சக்தியால் சர்வாதிகாரி மாக்கோஸ் இன் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை நினைவு கூர்ந்து பத்தாயிரம் மக்கள் முன் கருதினால் சின் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். அங்கு உரையாற்றிய கருதினால் அவர்கள் சீனி, தேங்காய், ஏகபோக உரிமை மீண்டும் தேவை தானா என வினாஎழுப்பினார். அக்வீனோ அங்கு உரையாற்றுகையில் ''மக்கள் சக்தி''யை நாம் மறந்தால், நாம் வெளியே அனுப்பியவர்கள் திரும்பவும் வந்துவிடுவார்கள் என்றார். பகிரங்கமாக பெயரை உச்சரிக்கா விட்டாலும் யாரைக் குறிப்பிட்டார் என அனைவரும் அறிந்திருந்தனர்.

அக்வீனோ அங்கு உரையாற்றுகையில் நான் எனது வேட்பாளருக்காக பிரச்சாரம் செய்ய விரும்பினாலும் கருதினால் சின் இன் முன்னிலையில் இந்த இடத்தில் அதனைச் செய்ய விரும்பவில்லை என குறிப்பிட்டார். அவரது வேட்பாளர் பிடெல் ராமோஸ் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர்.

பிலிப்பீன்ஸ் கத்தோலிக்கரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு. அங்கு பல்வேறு கொரில்லா இயக்கங்கள் உள்ளன. குருக்களாக இருந்தவர்கள் கூட கொரில்லா இயக்கத்தில் இருக்கின்றனர். பல கம்யூனிச இயக்கங்களும் ஆயுதப் போரில் ஈடுபட்டு வருகின்றன.

சென்ற மாதம் 15ஆம் திகதி பிலிப்பின்சிலுள்ள கிழக்கு மீன்டானோவில் புதிய மக்கள் படை (NPA) எனும் கொரில்லா இயக்கம் இராணுவத்தை வழிமறித்துத் தாக்கியதில் 47 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். கா மிகோ என பெயர்கொண்ட கத்தோலிக்க குரு பிதா பிரான்சிஸ்கோ இதனை முன்னின்று நடத்தியதாக இராணுவம் கூறுகிறது.

முதலாளித்துவ ஆட்சியை நடத்தி ஊழல்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட மார்கோஸ் இன் மனைவி எமல்டா மார்க்கோஸ் ஒரு புறம், போராளிக்குழுக்கள் மறுபுறமாக உள்ள அரசியல் களத்தில் திருச்சபை தன் கால்களை ஆழமாக ஊன்றி நிற்கின்றது. இது விஷப்பரீட்சையா அல்லது திருச்சபையின் அழைப்பும் பணியுமா?

திருச்சபையும், சமூகமும் வெவ்வேறானவையல்ல அவை தனித்துவமானவை என ஜனவரி 25 இல் தம்மைத் தரிசிக்கவந்த கிழக்கு பிரான்ஸ் ஆயர்களுக்கு திருத்தந்தை அறிவுரை கூறினார். பொல்லாத சூழ்நிலைகளிலும் திருச்சபை பணியாற்ற வேண்டும். விவேகத்துடன் நடக்க வேண்டும். அது மனித சக்திக்கு உட்பட்டதா? அப்பாற்பட்டதா?

# அகதிகளை அரவணைக்கும் மருதமடு 'அன்னை



## மடுத்திருப்பதி (இன்று) அல்லற்படுவோரின் இருப்பிடம்

இலட்சக்கணக்கான பக்தர்களை மாதாந்தம் வரவேற்று வந்த மடுத்திருப்பதியானது இன்று மத வேறுபாடின்றி அவதியுறும் அகதிகளை அரவணைக்கும் ஓர் பதியாகச் செயற்பட்டு வருகின்றது திடீரென மீண்டும் நாட்டில் உருவாகிய இனப்பிரச்சனை காரணமாக சொந்த வீடுகளையும், கிராமங்களையும், சொத்துக்களையும் விட்டுவிட்டு உயிரையாவது பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கோடு கால்கடுக்க, பசி எடுக்க, உடல் நடுங்க உறக்கமின்றி பல திசைகளிலுமிருந்து ஓடோடிவந்த மக்களை அன்றுதொட்டு இன்றுவரை ஆதரித்து வருகின்றாள் மருதமடுச் செபமாலை அன்னை.

**முகாமின் ஆரம்பம்:**

பல்லாயிரக்கணக்கான மக்கள் இரவுபகலாக மடுவில் குவிந்து கொண்டிருந்த காரணத்தால் நிரந்தரவீடுகள் எல்லாம் நிரம்பி, மரங்களின் கீழ் விடுதி அமைக்க ஆரம்பித்தனர். அதே வேளை இந்தியாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மக்களின் தற்காலிக தரிப்பிடமாகவும் இயங்கியது மடுத்திருப்பதி. ஒருசில மாதங்கள் கிறிஸ்தவ நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களோடு அரச நிறுவனங்களும் இணைந்து மக்களின் அத்தியாவசிய தேவைகளை ஓரளவுக்கு நிவர்த்தி செய்துகொண்டுவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் மக்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வந்தபடியாலும், உணவோ ஏனைய பொருட்களோ கொண்டு வருவதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டதினாலும் நிறுவனங்களும் மக்களும் பல இன்னல்களை அனுபவிக்கவேண்டி இருந்தது.

**ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வருகை**

மக்களின் அத்தியாவசிய தேவைகள் தொடர்ந்தும் நிறைவாக நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதை உணர்ந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மடுவில் காலடிவைத்தது. அவர்களைத் தொடர்ந்து இன்னும் ஒரு சில வெளிநாட்டு நிறுவனங்களும், உள்நாட்டு ஸ்தாபனங்களும் மக்களுக்கு உதவ முன்வந்தன. அரசாங்கம் மக்களுக்கு அனுப்பிக்கொண்டிருந்த உலர் உணவு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வருகையின் பின் துரிதப்படுத்தப்பட்டமையால் மடுவில் உணவுத் தட்டுப்பாடு ஓர் அளவுக்கு நிவர்த்தி செய்யப்பட்டது.

**நிர்வாக நிலைப்பாடு:**

மடு முகாமானது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முகாமாக இயங்கும் அதே வேளையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முழுமையான பராமரிப்பிலும், தேவாலய நிர்வாகத்தினது வழிநடத்துதலிலும், ஏனைய உள்ளூர் வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் இயங்கி வருவது இங்கு குறிப்பிட வேண்டியது.

உலர் உணவு பங்கீட்டுப் பணியை அரசாங்க நிர்வாகமானது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளின் மூலம் மடுவில் மூன்று நிலையங்களில் வைத்து மக்களுக்கு விநியோகித்து வருகின்றது முகாமின் பாரிய பொறுப்புக்களை ஆலய நிர்வாகம் பொறுப்பேற்று திறம்படச் செய்துவருகின்றது. ஆலயநிர்வாகம் செய்யும் பணிகளில் மிக முக்கியமானது முகாமில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைப்படுத்தி முகாமை இயக்கிவருவதேயாகும். அடுத்ததாக மக்களது இருப்பிட வசதிகளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் துணையுடன் உருவாக்கி இடம் பெயர்ந்தோருக்கு வழங்கி வருவதுடன் முகாமின் சுகாதாரப்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# எல்லாமே! அப்பாதான்

பாட்டி இறையடி சேர்ந்து ஒரு திங்கள் ஆகிவிட்டாலும் பார்க்கும் இடமெல்லாம் பாட்டியின் உருவத்தைக் காண்கிறேன்.

கேட்கும் ஒலியெல்லாம் பாட்டியின் 'யேசுராசா' என்று அழைக்கும் அன்பொலியைக் கேட்கிறேன். மூத்த பேரன் என்று முத்தமிட்டு என்னை அணைக்கும் அந்த அன்புக் கரத்தைத் தேடுகிறேன்.

அறிந்த நாள் தொட்டு இறக்கும் வரை என் நிழலாக இருந்த பாட்டியை நினைத்து நினைத்து நித்திரையின்றித் தவிக்கிறேன்.

அன்புத் தெய்வத்தின் நாமத்தை எனக்குச் சூட்டி என்னில் பக்தி கொண்ட பாட்டியை எப்படி மறப்பேன்?

உயர்தரப் பரீட்சை முடிவைப் பார்க்கக் கல்லூரி சென்றேன். அங்கும் பாட்டியின் நினைவு என்னைத் தொடர்ந்தது.

அப்பா ஷெல் அடியால் கால் இழந்து, வேலையற்று இருந்ததால் பாட்டியே கல்லூரிக் கடமைகளையும் அப்பாவுக்காகச் செய்தார்.

பரீட்சையில் என் சிறப்புச் சித்தியைக் காண என் பாட்டி இல்லையே என என் கண்கள் கண்ணீர் சொரிந்தன.

பல்கலைக்கழகம் செல்ல ஒருவருடம் காத்திருக்க வேண்டிய காலம் இது. அதுவரை சும்மா இருக்காது தொண்டர் ஆசிரியராக செயல்பட நினைந்தேன்.

பதின்மூன்று வருடங்கள் என்னை தன்னுள் வைத்து மனிதனாக உருவாக்கிய என் கல்லூரியில் தொண்டர் ஆசிரியராக இணைந்து கொண்டேன்.

முதல் நாள் ஆண்டு ஆறு வகுப்பறைக்குள் ஆசிரியனாக அடி எடுத்து வைத்தேன்.

''வணக்கம் அண்ணன்'' என்று வகுப்பறை அதிரக்கத்தினர். 'இருங்கள்' என்று சொல்லும் முன்னே இருந்து விட்டார்கள்.

எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சற்று நேரம் மௌனமாக நின்றேன். வகுப்பை நோட்டமிட்டேன்.

உங்களுக்கு என்ன விருப்பம் என்றகேள்வியைக் கேட்டேன்.

'கதை சொல்லுங்கோ' என்று கத்தினார்கள். கத்தலுக்கிடையே பாட்டி சொன்ன கதைகள் பல வந்து போயின.

''என்ன கதை சொல்ல'' என்று கேட்டேன். ''நல்ல கதையாகச் சொல்லுங்கோ!'' எனக் கத்தினார்கள்.

அப்பொழுது அடுத்த வகுப்பிலிருந்த கணித ஆசிரியர் மேசையில் தட்டினார். அத்தட்டல் என் முதுகில் அடித்தது போல் இருந்தது.

''சத்தம் போடாமல் இருந்தால் கதை சொல்வேன்,'' என்றதும் அமைதி அங்கு குடிகொண்டது.

☆ சிறுகதை

எழுதியவர்

**தாவீது தாசன்**

கதை சொல்லத் தொடங்கினேன், கதையில் தங்களை மறந்து என்னைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கதையின் உச்சக்கட்டம். குடிகாரத் தந்தை தாயில்லாச் சிறுவனை இழுத்து வந்து தன் தாயின் முன்னே 'ஏய், கிழவி, நீ கொடுத்த செல்லம்தான் கள்ள ராஸ்கல்'' என்று அடித்து, நீ வைச்சு வள, காசு

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# 1990களை நோக்கி.......

## தூரத்துப்பார்வை

## அமதிகள் மாநாடு

*இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.*

**கரவையூர்ச் செல்வம்**

**(13)**

(3) சிறப்புப் பணிகள்

முழுமையான ஒரு மனித வளர்ச்சியில் இருந்து, ஒருங்கிணைந்த வளர்ச்சியில் இருந்து வழிந்தோடுவதுதான் பணி. அதேவேளை சூழல் எம்மைச் சுற்றி நடைபெறும் சம்பவங்கள் எம்மைத் தாக்க (affect us) வேண்டும். இத்தாக்குதல்களை எதிர்கொள்ளும் சந்திப்புகளில் மக்களின் தேவைகள் புலனாகும். இத்தேவைகளுக்கு நாம் பதில் கூறுவதுதான் பணியாகும். ஆகவே, எமது தன்னலத்தில் இருந்து விடுபட்டு, எமது சுய திட்டங்களில் இருந்து விடுதலையாகி, சூழலுக்கும் மக்களைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளுக்கும் எம்மைத் திறந்து வைப்பது (openness) அவசியம். அதேவேளை அதுவே ஆன்மீக வளர்ச்சிக்கு வாய்க்காலாகவும் அமையும்.

மக்களின் இன்றைய வாழ்வை நாடிபிடித்துப் பார்த்து சேர்ந்து (உன்னிப்பான ஆழமான கேட்கும் தன்மையை வளர்த்து), கடந்தகால நிகழ்வுகளின் வரலாற்றுப் பின்னணியில் நிகழ்கால நிகழ்வுகளை ஆராய்ந்து, மக்களின் இன்றைய தேவைகளையும் எதிர்காலத்தேவைகளையும் எடுத்துரைத்து அவற்றிற்குப் பதில்கூற முனைவதுதானே தீர்க்கதரிசனங்கள். தொடர் உருவாக்கங்கள் இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளை தோற்றுவிக்கும்.

நாம் நினைப்பவை மட்டும்தான் பணிகளல்ல. எமது திட்டங்கள்தான் மக்களின் தேவைகள் அல்ல. காலாகாலமாக நாம் செய்து வந்தவை மட்டும்தான் சேவைகள் அல்ல. கோவில் வழிபாடுகளுடன் முடிவனதான் கத்தோலிக்க குருத்துவப் பணிகளல்ல. அர்த்தமற்ற சடங்குகளை வளர்ப்பதும், அச்சடங்குகளில் மக்களை மூழ்கடிப்பதும் பணிகள் அல்ல. ஏன்? இன்னும் ஒரு படிமேற் சென்று இப்படியும் கூறலாம்; மக்களை முழுமையாக வளரவிடாது (ஒருங்கிணைந்த வளர்ச்சி) தடை செய்வதற்கும் இச்சடங்குகள் சிலவேளைகளில் காரணிகளாகி விடுகின்றன. சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தினால், அவையே வழிபாட்டின் மையமாக மாறிவிட்டதினால், மக்களுடைய விசுவாசவளர்ச்சி (faith development) மிகவும் பாதிக்கப்படுகின்றது. மக்களுடைய ஒருங்கிணைந்த வளர்ச்சியும் பக்குவப்பட்ட நிலையும் (maturity) மிகவும் பாதிக்கப்படுகின்றன.

கத்தோலிக்க மதவாழ்வு மலரவேண்டுமானால், அர்த்தமுள்ள மதமாக மக்களுக்குத் திகழவேண்டுமானால், இன்றைய வழிபாட்டு முறைகள், அமைப்புக்கள் சடங்குகளின் தன்மைகள் கடுமையான விமர்சனத்திற்கும், ஆய்வுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். அப்பொழுது தான் பணபாட்டுமயமாக்கல் இன்றைய எமது பண்பாட்டில் வேற௫டுகக்கும்.

**மக்கள தேவைகள் :**

இன்றுவாழ் எமது தமிழினத்தின் தேவைகள் என்ன? இன்றுவாழ் தமிழினம் போர்க்காலச் சூழலில் வாழ்கின்றது. இந்த ஒன்பது ஆண்டுப் போரின் விளைவுகள் சில தலைமுறைகளையே பாதிக்கும் என்பது எமது கருத்து. இவற்றையிட்டு விரிவாக பிறிதோர் இடத்தில் எழுதியுள்ளோம். போரினால் பாதிக்கப்படாமல் எம்மைக் காப்பாற்றுவது வேறு; போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உளநெருக்கீடுகள் – அவற்றைப் புரிந்து கொள்ளும் தன்மைகள் வேறு. மிகவும் ஆழமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் முழு மனிதர்களாக வாழ, வளரத் தடைகள் என்ன? இத்தடைகளை எங்ஙனம் நீக்குவது? இங்கெல்லாம் அமதிகளின் பிரசன்னம் (presence) எங்ஙனம் அமையவேண்டும்? இப்படிப்பட்ட வினாக்கள் பல எழுப்பப்படவேண்டும். இவற்றிற்கு நாம் காணும் விடைகளில்தான் எமது பணிகள் 90களில் மலரவேண்டும். அப்பணிகள் அடையாளங்காணப்படும்பொழுது அவை சிறப்புப் பணிகளாக வளரும். இதற்கமைய அமதிகளின் உருவாக்கமும் (formation) பயிற்சிகளும் (training) அமைய வேண்டும். அதேவேளை, நாம் ஏற்கெனவே வற்புறுத்தியது போல அமதிகளின் தனிப்பட்ட முழுமையான – ஒழுங்கிணைந்த வளர்ச்சியின் விளைவாகவே பணிகள் வழிந்தோடவும் வேண்டும்.

முரணான, விரும்பிய பயிற்சிகளைப் பெற்றுவிட்டு, வேலைதேடித்திரியும் துறவிகளாக மாறினால் அவர்களின் விரக்திக்கும், வெறுப்புக்கும், வேண்டப்படாத உணர்வுகளுக்கும் அவர்களே வழி சமைப்பதாக மாறும். நான் இங்கே அமதிகளின் மாநாட்டை முன்னிட்டு இச் சிந்தனைகளை முன்வைப்பினும், இக்காலகட்டத்தில் வாழும் துறவற சபைகள் அனைத்துக்குமே இவை பொருத்தமாகும். (வளரும்)

## அகதிகளை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளையும் செயற்படுத்தி வருகின்றது. இவைகளோடு கூட நீர் வினியோகத்தையும் செய்து வருவதும் தேவாலய நிர்வாகமே அதுமட்டுமல்லாது வைத்தியத்துறையிலும் உரியவர்களுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதோடு மாணவர்களின் வருங்காலத்தை மனதிற்கொண்டு கல்வித்திணைக்களங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி முகாமில் உள்ள பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயில்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு பாடசாலை நிர்வாகத்தையும் கையாண்டு வருகின்றது. மேலும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டுவரும் உணவு தவிர்ந்த ஏனைய பாவனைப் பொருட்களை மக்களுக்கு வழங்குவதோடு தபால் வினியோகப் பணிகளையும் ஆலய நிர்வாகமே செய்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சொந்தக்கிராமங்களை, வீடுகளை, சொத்துக்களை இழந்து வந்திருக்கும் அகதிகளின் நலன்களைக் கவனிப்பதிலே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு பக்கபலமாக நின்று கைகொடுத்து உதவுவது வெளிநாட்டு ஸ்தாபனங்களான பிரான்சிய வைத்தியக் குழுவும், சிறுவர் பராமரிப்பு நிதிய ஸ்தாபனமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமுமாகும். பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளுக்கு முறைசாராக் கல்வியை ஊட்டு முகமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பலரது உதவி கொண்டு கைத்தையல் பயிற்சி, பன்னவேலை, தச்சுத்தொழில் போன்றவைகளையும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமானது முதலுதவிப் பயிற்சியையும் நடாத்தி வருகின்றன. அத்தோடு பிரான்சிய வைத்தியக் குழுவானது அரசாங்க வைத்தியக் குழுவுடன் இணைந்து வைத்தியத் துறையில் இரவுபகலாக சேவையாற்றிவருவது பாராட்டுக்குரிய தொன்றாகும்; அரச நிறுவனங்கள் மேலே குறிப்பிட்ட அத்தனை நிறுவனங்கட்கும் நிர்வாகங்கட்கும் பல வகையிலும் உதவியளித்து வருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

இன்று இலங்கையில் உள்ள அகதி முகாம்களிலே கூடுதலான சனத்தொகையைக் கொண்டமுகாம் இதுவாக இருக்கின்ற இவ்வேளையில் பல தரப்பட்ட நிறுவனங்களும், நிர்வாகங்களும் அல்லலுறும் அகதிகளின் நலன் கருதி ஒன்றுபட்டு செயற்படுவது போற்றுதற்குரிய விடயமாகும். மனமுடைந்த நிலையில் வருகின்ற மக்களுக்கு ஆறுதலும், தேறுதலும் அளித்து பாதுகாத்து பராமரித்து வருகிறாள் மருதமடு அன்னை என்ற உண்மையை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தகவல்: இ. அகஸ்ரின்

## காவலன் கண்மணிகள்

| ஒளி : 6<br>சுடர்: 6 | **எம் விழிகளின் ஒளி யேசு**<br>**எம் வாழ்வின் வழி யேசு** |
|---|---|

**என்னகம் : 6**

அன்புக்கினிய கண்மணிகாள்!

தவக்காலம் என்றதும் உங்கள்
எண்ணத்தில் எழுவது என்ன? சிலர் எண்ணம்
முட்டையடியில் (இம்முறை தக்காளியடி)
மூழ்கி எழும்
சாம்பலடியில் குளித்து வரும்.
சிலுவைப்பாதையில் சென்று வரும்.
பெரிய வியாழன், பெரிய வெள்ளியில்
தியானித்து நிற்கும்.
உயிர்த்த ஞாயிறில் ஊறி நிற்கும்.
ஒறுத்தலில் ஒன்றித்திருக்கும்.
மனமாற்றத்தில் மகிழ்ந்திருக்கும்.
படமே தஞ்சமென காலத்தை விரயமாக்குர்.
இந்தக் காலத்தை தவறவிட்டவர் எந்தக்
காலத்தில் யேசுவிடம் செல்லுவர்?

அன்புக் கண்மணிகாள்!

உங்கள் அன்புக்குரிய ஒருவர்
உங்களை அழைத்து
"நான் செல்வதற்கு முன் உங்களோடு
இந்த உணவை உண்ண ஆசையாக
இருக்கிறது, இதுவே உங்களோடு உண்ணும்
கடைசி உணவு", என்று கூறினால்
உடனே நீங்கள் சொன்னவரின்
வாயைப் பொத்தி அப்படிக் கூறவேண்டாம்
எனக்கூறுவீர்,
தேம்பித் தேம்பி அழுவீர்.
கண்கள் சிவக்க, வாய்துடிக்க
கண்ணீர் சொரிந்து நிற்பீர்,

அன்புக் கண்மணிகாள்!

எங்கள் மீட்பர் அன்று கூறிய வார்த்தையை லூக்காஸ் நற்செய்தியில் (22:14–20) எடுத்துப் படியுங்கள்; தியானியுங்கள்.

எங்கள் தியாகத்தலைவரை நித்தம் சந்திக்க, அவருடன் இணைய, அவருடன் வாழ தினம் திருப்பலி காணுங்கள் என்று கூறும்.

உங்கள் அன்பின்,
அன்பு விழி

## சிந்தனைக்கு மருந்தும் விருந்தும்

18ஆம் நூற்றாண்டில் பிரான்சில் ஏற்பட்ட புரட்சி பற்றி இன்றும் பலர் பலவாறு நோக்குவர். அக்காலச் சூழலில் இயேசுவையும், அவரின் அடியார்களையும் வெறுத்த கூட்டத்தினர் கிறிஸ்தவர்களை கொடுமைப்படுத்தினர், கொலை செய்தனர்.

ராட்டிஸ் போன் என்ற புரட்சிவீரன் "ஏன் இத்தனை பேர், உயிர் போனாலும் இயேசுவை மறுப்பதில்லை?, அவரை விடாது பற்றிக்கொள்கின்றனர்? நான் எவ்வளவோ ஆதரவளித்தும் மக்கள் என்னைப் பின்பற்றுவதில்லை" என்று ஏங்கினான். முடிவு காண அவனால் முடியவில்லை. தன் குரு ராபிஸ் பேரிடம் சென்று காரணத்தை அறிய ஆவலாய் இருந்தான். ராட்டிஸ் போனின் குரு கூறிய பதில் ......

அடுத்த சுடரில் வரும்.

அன்பு விழி

## யார் இவர்?

பிரித்தானிய நாட்டில் கி. பி. 385 ஆம் ஆண்டு பிறந்தவர். இளம் வயதில் அயர்லாந்து தேசத்துக்கு நாடு கடத்தப்பட்டார். அடிமையாகக் கடத்திச் செல்லப்பட்டவர் அங்கு ஆடு, மாடுகளை மேய்த்தார். காலத்தின் சுழலில், கடவுள் அருள் இவரை ஆட்கொண்டது. தாயகம் திரும்பி குருத்துவப் பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். உறங்கும் வேளையில் "அயர்லாந்து நாட்டு மக்களின் குரல் உன்னை அழைக்கின்றது", என்ற குரலொலியைக் கேட்டு அயர்லாந்து தேசத்துக்கு நற்செய்திப்பணியை செய்யப் புறப்பட்டார். ஆயரான இவர் கி. பி. 432 அங்கு சென்றபோது அவரின் பணிக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. அவற்றை மனவலிமையுடன் தாங்கி பலரை குருத்துவ நிலைக்கு உயர்த்தினார். அயர்லாந்து மக்கள் கிறிஸ்துவின் மககளாக மாறினர். அங்கு அவர் ஏற்றிய தீபம் யாழ் மண்ணிலும் பெரும் கல்லூரியாக பெருமையுடன் அவர் பெயரில் அவர் பணியைத் தொடர்ந்து செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# ஜப்பானில் ஆன்மீக ஆய்வரங்கு

''மனிதனின் ஆன்மா ஆன்மீக உணவினால் மட்டுமே போஷிக்கப்படலாம்'' என சமாதானத்துக்கும், புது உலக ஒழுங்கமைதிக்கும் ஆசியாவின் பங்களிப்புப்பற்றி ஜப்பானில் நடந்த ஆய்வரங்கொன்றின் போது கூறப்பட்டது'

நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கில் நான்கு மதப்பெரியார்கள் உரையாற்றுமாறு அழைக்கப்பட்டனர். இந்தியாவைச் சேர்ந்தவரும் மகாத்மாகாந்தியின் பேரனுமான ராஜ்மோகன் காந்தி இந்துமதத்தின் சார்பாகவும், உலக முஸ்லீம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் இனமுல்லா கான் இஸ்லாம் சார்பாகவும், கருதினால் ஹைமி சின் கிறிஸ்தவர் சார்பாகவும் உரையாற்றினர். பௌத்த சமயத் தலைவரான தலாய்லாமா சமுகமளிக்க முடியாதபோதிலும் தமது உரையை ஒளிப்பதிவு நாடவில் அனுப்பியிருந்தார்.

பல்வேறு இன, மத மக்களின் ஒப்புரவும், ஏற்புணர்வும், உலகசமுதாயத்திற்கென பொதுவான ஒரு ஒழுக்கநெறி, சமாதானத்துக்கும் புதிய அமைப்புக்கும் ஜப்பானின் பங்களிப்பு என்ற விடயங்கள்பற்றி ஆராயப்பட்டது.

தூய்மை, சுயநலமின்மை, அன்பு ஆகியவற்றின் மீது அமைக்கப்பெற்ற ஒழுக்க நெறியே ஒன்று சேர்ந்து உழைக்கவும், தற்காலத்தேவைகளைப் பூர்த்திசெய்யவும் துணைபுரியும் என மேற்கண்ட ஆய்வரங்கில் குறிப்பிடப்பட்டது.

''முன்பு ஜப்பான் நாட்டை அபிவிருத்திசெய்ய புதிய கருத்துக்களைப் பெறும்படி மூளைசாலிகளை வெளியே அனுப்பியது. இப்போது ஆசியாவில் இதே பணியைப் புரிய ஜப்பான் தனது மூளைசாலிகளை அங்கு அனுப்பப்போகிறது'' என கருதினால் சின் குறிப்பிட்டார்.

இந்த ஆய்வரங்கு நிகழ்ச்சிகளை ஜப்பானிய வானொலி 75 நிமிட நிகழ்ச்சியாக ஒலிபரப்புச் செய்தது.

# கருத்தரங்கும் ஒன்றுகூடலும்

மன்னார் சவேரியார் ஆண்கள்-பெண்கள் கல்லூரிகளுக்கிடையிலான மாணவர் ஒன்றியங்களின் ஒருநாள் கருத்தரங்கும் ஒன்று கூடலும் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் மாசி மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு குத்துவிளக்கேற்றலின் பின் செப வழிபாட்டுடன் ஆரம்பமானது.

அதைத்தொடர்ந்து புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் திரு. யூட் பிகிறாடோ அவர்களும், புனித சவேரியார் பெண்கள் கல்லூரி அதிபர். அருட்சகோதரி வீஜினி அவர்களும், புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி கத்தோலிக்க மாணவர் ஒன்றியப் போஷகர் அருட்திரு லோ. ஞானாதிக்கம் அடிகளும் உரையாற்றினார்கள்.

பின்னர் மன்னார் மறைவட்ட இளைஞர்களின் அப்போஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அருட்திரு. எம் லடிஸ்லாஸ் அடிகளின் தலைமையில் ''புனித உறவுகள்'' என்ற தலைப்பில் இளைஞர் களுக்கான கருத்தரங்கு ஆரம்பமானது. இதில் வழங்கப்பட்ட கருத்துரைகளினால் இளைஞர் மத்தியிலே இருந்த பல தடைக்கற்கள் அகற்றப்பட்டு இளைஞர்கள் தங்களைப் புரிந்து கொண்டு சமூகத்தில் இணைந்துவாழும் தன்மையை உணரப்பண்ணியது. சமூகத்தின் தப்பான கண்ணோட்டத்தையும் இது தகர்த்தெறிந்து இளைஞர் சமுதாயம் உறவுகளை வளர்த்து வாழவும் இது பெரிதும் உதவியுள்ளது. மாலை 4 00 மணிக்கு இரு கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்திற்குமிடையில் ஒரு ஒன்றுகூடல், குழு குழுவாகப் பிரிக்கப்பட்டு அவர்கள் மத்தியில் உண்மையான உறவின் பாலத்தை உருவாக்க சிறு சிறு குழு நிகழ்ச்சிகளையும் செய்வித்து மனித உறவின் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. பின்னர் செயலாளரினால் நன்றியுரை இடம்பெற்றது. இறுதியில் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் இக்கருத்தரங்கும் ஒன்றுகூடலும் இனிதே நிறைவுற்றது.

—ப. ஞானராஜ்
மடுமாதா சிறிய குருமடம்,
மன்னார்.

# சோகத்தில் மிதந்த அன்னை

## தவக்காலச் சிந்தனை



கண்ணெனக் காத்தமைந்தன்
    கண்ணீரில் மிதந்துபோக
பெண்ணென நின்ற அன்னை
    பேதைதான் பாவமங்கு
தன்னெதிர் தனையனுக்குத்
    தண்டனை காணத் தாய்மை
புண்ணிலே நுழைந்த வேலாய்
    புதைந்தவள் துடித்து நின்றாள்.
முள்முடி சிரசை வாட்ட
    முழுஉடல் வெடித்துக் குருதி
தள்ளாடிப் போகும் யேசு
    தளர்ந்தவர் குலைந்து விட்டார்
கல்மனம் படைத்த ஈனர்
    காட்டிடை விலங்காய் நிற்க
வல்லவன் தேவமைந்தன்
    வாதையால் வதங்கிப் போனார்

என். சி. அருள்வரதன் (வளரும்)

# எல்லாமே....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துப் பழக்கி வீட்டில் ஒரு சதமும் வைக்க வழியில்ல, எந்த நேரமும் வாயாடிய படி,'' என்று தள்ளிவிட்டு, தள்ளாடிக் கொண்டு போனான்.

''அட, பாவி, பாழாய்ப் போனவனே! உன்ர குடியாலே பொஞ்சாதியைப் பறிகொடுத்தாய். இப்ப புள்ளையையுமா கொல்லப்பாக்கிறாய்,'' என்று கிழவி போல் நடித்துக் காட்டினேன்.

பாட்டிப் பாத்திரத்தால் வகுப்பில் சிரிப்பொலி கிளம்பியது. ஆனால் ஒரு மாணவன் மட்டும் சிரிக்காமல் முகத்தை உம் என்று வைத்திருந்தான்.

அவனிடம் ''கதை எப்படி''? என்றேன்.

''கதை சரியில்லை.'' என்று பட் என்று பதிலளித்தான். எனக்கு திக்கென்றது. மற்ற மாணவர் மகிழ்ந்து ஆரவாரிக்க இவன் மட்டும் ஏன் இப்படிக் கூறினான்?

''ஏன் கதை சரியில்லை,'' என்று கேட்டேன். 'அப்பா குடிகாரன், பிள்ளை கள்ளன், கிழவி செல்லம் கொடுத்துப் பேரனைக் கெடுத்தவ, நல்லவர் இல்லாத கதை நல்ல கதையில்லை,'' என்றான். என் உள்ளம் துணுக்குற்றது. ஆண்டு ஆறு படிக்கும் மாணவனின் பதில் என்னைச் சிந்திக்க வைத்தது. அவனை அன்பாக அழைத்து அருகில் வைத்து ''உங்க அப்பா என்ன தொழில் செய்கிறார்.'' எனக் கேட்டேன்.

''ஆசிரியர்'' என்றான்.

''அம்மா'' ''எனக்கு எல்லாமே அப்பாதான்'': என்று கணீர் என்று கூறினான்.

என் இதயத்தில் சுள் என்ற ஒரு வலி. இழப்புகள் மத்தியிலும் இவன் இவ்வளவு மனோபலம் உள்ளவனாக இருக்கிறானே?

நல்லதை நாடும் இச்சிறுவனின் தந்தையைச் சந்திக்க என் மனம் ஏங்கியது. ஏன் என்பாட்டியும் என்னை இப்படித்தானே வளர்த்தாள். என் பாட்டி என் உள்ளத்தில் குடியமர்ந்தாள்.

அவனின் அப்பாவை அன்று மாலை சென்று சந்தித்தேன். இறையுணர்வில் நிறைந்து வாழும் அவர் சந்திப்பு இழப்புகளை இனிதே தாங்கும் நல் இதயத்தைத் தந்தது. ''எல்லாமே! அப்பாதான்'' என்ற வார்த்தை என் உள்ளத்தில் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது

★ ★ ★

*அன்பு நிறை இறைவன்தான் அப்பா அச்சிறுவனின் அடித்தளம் அதுதான்.*

(யாவும் கற்பனையல்ல)

# அச்சுவேலியில் மறை அறிவுப் போட்டி

பங்குனித்திங்கள் 8ஆம் நாள் ஞாயிறு மாலை அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் மறை அறிவு அடிப்படையிலான போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு நிலைய இயக்குனர் அருட்திரு J. நிக்கலாஸ் அடிகள் பிரதம விருந்தினராக சமுகம் கொடுத்தார்.

புனித ஸ்நாபக அருளப்பரின் வாழ்வை மையமாயமைந்த ''இரும்பு மனிதன்'' என்ற நாடகமும், பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

மறையறிவுப் பரீட்சைகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், மறையறிவு வகுப்புகளுக்கும் தவறாது பங்குபற்றியவர்களுக்கும் மறையறிவு புகட்டிய ஆசிரியர்கள் – கன்னியர்களுக்கும் பரிசில்கள் பிரதம விருந்தினரால் கொடுக்கப்பட்டன.

பங்குக்குரு அருட்திரு பேனாட் றெக்னோ அடிகளின் தூண்டுதலினாலும், ஊக்கத்தினாலும் இவ்விழா இனிதே நிறைவேறியது.

யோ. அ. ஆனந்தம்

# பாவத்தில் வாழ்வதைவிட கலப்புமணம் மேல்

''பல இனத்தவர்கள் வாழும் ஒரு நாட்டில் கலப்பு மணங்கள் தவிர்க்கமுடியாதவை. ஆகவே அவற்றைச் சட்டத்தினால் தடுக்கமுடியாது'' என இந்தோனேசிய உயர்நீதி மன்றத்தின் தலைவரான அலி செத் என்பவர் குற்றச்செயல்கள்பற்றிய ஆய்வரங்கொன்றைத் திறந்து வைக்கும்போது கூறினார். அந்நாட்டின் திருமணச்சட்டத்தின்படி ஓரே மதத்தைச் சேர்ந்தவரே திருமணம் செய்யமுடியும். ஆனால் 1989இல் இச்சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

''விவாகமாகாமல் பாவத்தில் வாழ்வதைவிட கலப்பு மணங்கள் மேல்'' என்று அலி செத் கூறியதாக கத்தோலிக்க பத்திரிகையான கொம்பஸ் தினசரி கூறியுள்ளது.

இந்தோனேசிய சட்ட உதவி நிறுவனத்தின் இயக்குநரான அப்துல் நுசந்தரா இச்சட்டத் திருத்தம் இந்தோனேசியக் குடிமகனுக்கு எவரையாவது மணம் செய்யும் உரிமை அளிக்கின்றது. சமயச் சடங்குகளின்றி அவர்கள் பதிவுத் திருமணம் செய்ய விரும்பினால் அவர்கள் பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினார்.

இஸ்லாமிய மதத்தின்படி ஒரு முஸ்லீம் பெண் பிறமத ஆணை மணப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியீடப்பட்டது.

இல. QB/1001/58/81

விண்ணரசின் பாதை
திருச்சிலுவையின் பாதை

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org